சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. A. Palanisamy*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

11 வைகாசி 2052
25th May 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

**Special Issue :** **International Virtual Conference -2021**
**Department of Music**
**Avinashilingam Institute For Home Science**
**And Higher Education For Women,**
Coimbatore - 641 043, Tamil Nadu, India

## SOUTH INDIAN MUSIC AND DANCE

*Special Issue Editors*

**Prof. V.JANAKA MAYA DEVI**

**Dr. A.V.SAJINI**
Assistant Professor & HOD (i/c)

**Mrs. BINDU J R**
Assistant Professor

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

25 பகுதி-2
Part -2

# சங்க இலக்கியங்கள் சுட்டும் பண்களும் தற்கால இராகங்களும்

**சின்னையா - சூரியகுமார்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, இசைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச்சுருக்கம்**

இசையை அறிந்தால் அதன் மூலம் இறைவனை அடையலாம் என்பது ஆன்றோர் வாக்கு. இறைவனை வழிபடுவதற்கு பல வழிமுறைகள் இருந்தாலும் அவற்றுள் இசை சிறந்த வழியாகக்கருதி இறையடியார்கள் இசைபாடி இறைவனை வழிப்படுகின்றனர். இறைவனை மட்டுமல்லாது ஐந்தறிவுள்ள விலங்குகள் முதல் ஆறறிவு கொண்ட மனிதன் வரை எல்லாவற்றையும் தன்வசப்படுத்தும் தன்மை இசைக்கு உண்டு என்பதை மெய்ஞானம் சுட்டும் சான்றுகள் மூலம் அறிகின்றோம். கலைகளுக்கெல்லாம் முதன்மையாகக் கருதப்படும் இசைக்கலை மரம், செடி கொடிகள் வளர்வத்ற்குரிய கருவியாகவும், உடல், மனம் சார்ந்த நோய் தீர்க்கும் அருமருந்தாகவும் அமைவதாகத் தற்கால விஞ்ஞானம் நிருபித்துள்ளது. தொன்று தொட்டு வளர்ந்துவரும் தமிழிசை வரலாற்றில் சங்ககாலம் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றது. ஏனெனில் இக்காலத்திலேயே ஏராளமான நூல்கள் தோன்றி இசை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தது. எனவே சங்ககாலத்து நூல்களான தொல்காப்பியத்துடன் எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் கூறப்பட்டுள்ள இசை தொடர்பான செய்திகளில் பண்கள் பற்றிய தகவல்களின் அடிப்படையிலேயே தமிழிசை மரபானது இன்றுவரை வளர்க்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு பேணப்பட்டுவந்த பண்முறையானது எவ்வாறு மாற்றம் பெற்று வந்தது, அதன் தற்கால போக்கு எவ்வாறு உள்ளன போன்றவற்றினை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

**கலைச்சொற்கள்:**

இசை, பண், பாலை, சங்ககாலம், இராகம்,

**ஆய்வு நோக்கம்:**

பல்வகைச் சிறப்புக்கள் கொண்ட தென்னிந்திய இசையின் தனிச்சிறப்பே அதிலுள்ள இராகங்கள் தான். உலகில் உள்ள எந்த இசைமுறையிலும் இல்லாத அளவிற்கு அவை ஏராளமாகக் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுகின்ற இராகங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக காணப்படுபவை ஸ்வரங்கள் என்று தற்காலத்தில் அழைக்கப்படுகின்ற ஒலிநிலைகளாகும். அதனையே ஒலியிலிருந்து சுரங்களும், சுரங்களிலிருந்து இராகங்களும் தோற்றம் பெறுவதாகக் குறிப்பிடப்படுகின்றன. பண்டைக்காலத்தில் பாலை, யாழ், பண், பண்ணியற்திறம், திறம், திறத்திறம் என்று நடைமுறையில் இருந்த போதிலும் தற்காலத்தில் தாய் இராகம், மேள இராகம், கர்த்தா இராகம், மேளகர்த்தா இராகம், ஜனக இராகம், ஜன்னிய இராகம், போன்ற பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகின்ற போதிலும் இவை அனைத்தும் பண் என்கின்ற ஒன்றினையே குறிக்கின்றது என்பதனைத் தெரியப்படுத்தப்படுவதுடன் சங்ககால நூல்களில் பலவகையான பண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவை தற்காலத்தில் பெரும்பாலானவை நடைமுறையில் இல்லை என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். எனவே பண்டைக்காலத்தில் பயன்பாட்டில் இருந்த பண்கள் எவை என்பதையும் அவை தற்காலத்தில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் வெளிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப்பிரச்சனை.**

தொன்றுதொட்டு பயன்பாட்டிலுள்ள தமிழ்ப்பெயர்களையும், பயன்பாட்டு முறைகளையும் தற்காலத்தில் மாற்றியமைத்துள்ளமை.

**கருதுகோள்.**

தற்கால இராகங்களின் அடிப்படைக்கு வித்திட்டது சங்ககால இலக்கியங்களாகும். பண்களும், இராகங்களும் பெயரளவில் வேறாக இருந்தாலும் அடிப்படையில் அவை இரண்டும் ஒன்றாகும்.

**ஆய்வுமுறையியல்.**

இவ்வாய்வானது ஒப்பீட்டு ஆய்வினையும், விவரண ஆய்வினையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது.

**பண்கள்.**

பண் என்பதற்கு அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், சீர், தகுதி, நிந்தை, நிறை, நரம்புள்ள வீணை என பொருள்கள் தமிழ் அகராதியில் உள்ளன. பண் என்பது பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறையாகும். ஒலி செம்மையான முறையில், ஒழுங்கான இசையமைப்புடன் பாடல்களில் ஒலி உருவமாக அமைவது பண் ஆகும். பண்கள் தமிழ் மக்கள் வாழ்வோடு மிகவும் நெருக்கமுடையன. சங்ககாலத்தில் இருந்தே பண்ணிசையும், பண்ணிசை வல்லவர்களும் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். பாணர்கள் பண்பாடி அரசவையில் பரிசுகள் பெற்றனர். [1]

மூலாதாரம் தொடங்கிய எழுத்தோசை ஆளத்தியாயம் பின் இசையென்றும் பண்ணென்றும் பெயர் பெற்றது. பல இயற்பாக்களோடு இன்னோசையாகிய நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராயிற்று. நிறம் என்பது பண் அல்லது இராகமாகும். அடியார்க்கு நல்லார் பின்வருமாறு இதைக் குறிப்பிட்டுள்ளார்.

''பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தானம் எட்டாலும் - பாவாய்...''

பாவினோடு இணைந்து வரும் இசையினை நெஞ்சு, கண்டம், நாக்கு, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டு இடங்களிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண் வகைத் தொழில்களால் உருவாகப்பண்ணி பாடப்பெறுவது பண்ணாதலின் பண் என்பது காரணப்பெயராயிற்று. [2]

**நாற்பெரும் பண்கள்.**

பண்டைத் தமிழர்கள் பரந்த தமிழகத்தை ஐம்பெரும் நிலங்களாகப் பிரித்து சிறப்பாக வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்று அறியமுடிகின்றது. ஆயினும் தமிழிசை வரலாற்றில் தொல்காப்பியர் காலத்தில் நால்வகை நிலப்பாகுபாடு இருந்ததை தொல்காப்பியத்திலிருந்து அறியலாம்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும் ....
(தொல் - பொருளதி - அகத்திணை - 5)

தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய நூற்றாண்டுகளில் தமிழிசையோர் தமிழிசைப் பெரும் பண்களை நிலங்களின் அடிப்படையில் நான்கு என வகுத்தனர். அவற்றை "யாழ்" எனக் குறிப்பிட்டனர். யாழ் என்பது பெரும் பண்ணைக் குறிப்பது. அதாவது ஏறு இறங்கு நிரலில் ஏழு இசை நரம்புகளைக் கொண்ட தலைமைப் பண்ணைக் குறிப்பது. அவற்றை முல்லையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என்று பாணர்கள் பகுத்து வரிசையில் நிறுத்தினார்கள். பின்னர் யாழ்களைச் சங்க காலத்தவர்கள் பாலை என்று குறிப்பிட்டனர். தென்னிந்திய இசையில் தற்காலத்தில் இராகங்கள் என அழைக்கப்படுபவை

பண்டைத்தமிழ் மக்களால் பண்கள் என அழைக்கப்பட்டன.[3]

**சங்க இலக்கியங்களில் பண்கள்**

சங்க காலத்தில் தமிழகம் ஐவகை நிலங்களாகப்பிரிக்கப்பட்டு ஐவகை நிலங்களில் வாழும் மக்கள் அவர்களின் வாழ்க்கை, தொழில், வணங்கிய தெய்வம், பாடிய பண், பண்ணிசைக்கருவி, தாளவிசைக்கருவி போன்றவற்றைப் பற்றி இளம்பூரணனார் தொல்காப்பியத்தியத்திற்கு எழுதிய உரையில் விளக்கியுள்ளார். நான்கு அடிப்படைப் பண்களான மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி பற்றி சங்க இலக்கியங்களில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.[4] சான்றாக,

1. **மருதம்** - மருத நிலத்துக் காலைப் பண்ணாகிய இப்பண்பற்றி குறிப்பிடும் மதுரைக்காஞ்சி.

   "சீரினிது கொண்டு நரம்பினிது இயக்கி யாழோர் மருதம் பண்ண.." (மதுரை 657-658)

2. **செவ்வழி** - முல்லைக்கும், நெய்தலுக்கும் உரிய மாலைப் பண்ணாகிய செவ்வழிப் பண் ஆகுளி, முடிவு என்னும் கருவிகளோடு இசைக்கப்பட்டதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. தலைவனைப்பிரிந்த தலைவி மாரி காலத்து மாலைப் பொழுதில் செவ்வழிப் பண்ணைக் கேட்டு வருத்தமுற்றாள் என அகநானூறு கூறுகின்றது.

3. **பாலை** - "ஆறலைக் கள்வர் படைவிட அருளின் மாறுதலை பெயர்க்கும் மறுவின் பாலை"

   என நண்பகலுக்குரிய பாலைப் பண்ணைப் பற்றி பொருணராற்றுப்படை கூறுகின்றது.

4. **குறிஞ்சி** - நடு யாமத்திற்குரிய இப்பண்ணில் இனிய யாழினையுடைய விறலியர் குறிஞ்சிப் பண்ணை இசைப்பர் என மலைபடுகடாமும், வில் யாழில் குறிஞ்சிப் பண்ணை இசைப்பர் என பெரும்பாணாற்றுப்படையும் கூறுகின்றது.

சங்க நூல்களில் முதன்மையாக பாலை யாழ் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. மேலும் அங்கு காணப்படும் பண்கள், செம்பாலை, நைவளம், சீகாமரம் என்பன. அகநானூற்றில் பாலைப்பண், குறிஞ்சிப்பண், செவ்வழி, விளரி என்ற பண் பாகுபாடுகளை எடுத்துச் சொல்கின்றது. ஐங்குறுநூற்றில் பாலைப்பண், முல்லைப்பண், செவ்வழிப்பண் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகின்றது. குறுந்தொகையில் படுமலைப்பாலை, குறிஞ்சி, விளரி ஆகியவை காணப்படுகின்றன. கலித்தொகையிலும் பாலையும், செவ்வழிப்பண்ணும் சொல்லப்படுகின்றது. நற்றினையில் படுமலைப்பாலையும், விளரி இசையும் காணப்படுகின்றன. புறநானூற்றில் குறிஞ்சிப் பண், முல்லைப்பண், மருதப்பண், செவ்வழிப்பண் என நான்கு பண்களைக் காண்கின்றோம். பொருநராற்றுப்படையில் திணை மயக்கத்தினால் குறிஞ்சி நிலத்திற்குரிய பண்ணாகிய குறிஞ்சிப் பண்ணை நெய்தல் நில மக்களாகிய பரதவர் பாடுகின்ற செய்தி, "குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்" (பொரு . 215) எனும் அடியில் கூறப்பட்டுள்ளது.[5]

**பண்களின் வகைப்பாடுகள்.**

சிலப்பதிகார அரும்பத உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஆதி இசைகளை தொழிற்படுத்திப் பாடுவது சாத்தியம்மில்லையாதலால் நாளடைவில் படிப்படியாக குறைக்கப்பட்டு பாடுவதற்குரிய பண்கள் 103 ஆகியது. இவ்வாறு இருந்த பண்களை வெவ்வேறு வகையாக வகைப்படுத்தினர். அவற்றில் 103 பண் முறை, 23 தேவாரப் பண் முறை என்பன குறிப்பிடத்தக்கவை.

பண்கள் மொத்தம் 103 என்று வகைப்படுத்தியுள்ளனர். இது நரம்புகளின்

அடிப்படையில் செய்த பகுப்பாகும். மேலும் செம்பாலை முதலிய ஏழு பாலைகளில் 103 பண்கள் பிறக்கும் வகையிலும் முறைப்படுத்தலாம். அவை செம்பாலை (கரிகாம்போதி) யில் பிறக்கும் பண்கள் மொத்தம் - 8, படுமலைப்பாலை (நடபைரவியில்) பிறக்கும் பண்கள் - 22, செவ்வழிப்பாலை (இருமத்திம தோடி) யில் பிறக்கும் பண்கள் 12, அரும்பாலை (சங்கராபரணம்) யில் பிறக்கும் பண்கள் - 26, கோடிப்பாலை (கரகரப்பிரியா) யில் பிறக்கும் பண்கள் - 12, விளரிப்பாலை (தோடி) யில் பிறக்கும் பண்கள் - 5, மேற்செம்பாலை (கல்யாணி) யில் பிறக்கும் பண்கள் - 18 என்று மொத்தம் 103 பண்களாகும். இது ஏழு பாலையிசை (பெரும்பண்) களின் அடிப்படையில் வகைப்படுத்துவதாகும்.[6] மேலும் நிலங்களின் (யாழ்களின்) அடிப்படையில் 103 பண்களை வகைப்படுத்தலாம்.

"நாற்பெரும் பண்ணுந் சாதி நான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப் படுமே''
(சிலப்பதிகாரம்)

நான்கு வகை நிலங்களில் தோன்றிய பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், முல்லை (செவ்வழி) யாழ் ஆகிய நான்கு யாழ்களும் நாற்பெரும் பண்களாகும். இவை ஒவ்வொன்றும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்ற நான்கு வகைச் சாதிகளிலும் இசைக்கும் பொழுது அவை ( 4 x 4) 16 பெரும் பண்களாகின்றன. ஐந்தாவது நிலமாகிய நெய்தல் யாழில் பிறக்கும் தாரப்பண் (மேற்செம்பாலையாகிய கல்யாணி) என்ற பெரும் பண்ணும் சேர்ந்து பண்கள் (சம்பூர்ணராகம்) மொத்தம் 17 ஆகும். மேற்கூறிய நாற்பெரும் பண்களுக்கும் 21 திறங்கள் உள்ளன. இதில் பாலையாழ் (சங்கராபரணம்) திறங்கள் 5, குறிஞ்சியாழ் (கரிகாம்போதி) திறங்கள் 8, மருதயாழ் (கரகரப்பிரியா) திறங்கள் 4, செவ்வழி (முல்லை) யாழ் (நடபைரவி) திறங்கள் 4 என்று மொத்தம் 21 திறப்பண்களாகின்றன. இவை ஒவ்வொன்றும் அகம், புறம், அருகு, பெருகு என்று நான்கு வகைச் சாதிகளிலும் இசைக்கும் பொழுது (21 x 4) 84 திறப்பண்களாகின்றன. இவற்றொடு பையுன் காஞ்சி, படுமலை என்ற இரண்டு திறப்பண்களையும் சேர்க்க மொத்தம் 103 பண்களாகின்றன. இதன்மூலம் பழந்தமிழரின் இசைமரபில் பண்களின் அமைப்பு நன்றாகப் புலனாகிறது. பண்டைய இசையில் பயன்படுத்தப்பட்ட பண் வகைகளை பண்கள் என்றும், பண்ணியல் திறங்கள் என்றும், திறங்கள் என்றும், திறத்திறங்கள் என்றும் வகைப்படுத்தி பயன்படுத்தப்பட்டதை அறிய முடிகின்றது.[7]

**பண்கள்**

ஏழு நரம்புகளைக் கொண்டவை 1. பாலையாழ், 2. தேசானி, 3. நிருபதுங்கராகம், 4. கொடிநாகராகம், 5. குறிஞ்சியாழ், 6. செந்து 7. மண்டலியாழ் 8. மவுரி 9. மருதயாழ் 10. யாசரி (ஆகரி) 11. சாயவேளர் கொல்லி 12. கின்னராகம் (கின்னரம்) 13. செவ்வழியாழ் 14. மவுராழி 15. சீகாமரம் 16. சந்தி 17. தாரப்பண்.

**பண்ணியல் திறங்கள்**

இவை ஆறு நரம்புகள் கொண்டவையாகும் அவையாவன 1. தக்கராகம் 2. அந்தாளிப்பாடை 3. அந்தி 4. மன்றல் 5. நோநிறம் (குறண்டி) 6. வராடி (தமிழ் வராடி) 7. பெரிய வராடி 8. சாயரி (சனாகி) 9. காந்தார பஞ்சமம் 10. அத்தாட்டம் (திராடம்) 11. அழங்கு 12. கொல்லி 13. தாணு 14. காஞ்சி (மேகாஞ்சி) 15. சிகண்டி (நளிடை) 16. சாழங்க நாட்டை (தேசாக்கிரி) 17. சுருதி காந்தாரம் 18. சோகவராடி 19. நட்டபாடை (நைவளம்) 20. அந்தாளி (அந்தாளிக் புறிஞ்சி) 21. மலகரி 22. விபஞ்சி 23. செருந்தி 24. கௌடி 25. உதயகிரி 26. பஞ்சுரம் (பழம் பஞ்சுரம்) 27. மேகராகக் குறிஞ்சி 28. மேகராகக் குறிஞ்சி 29. கவ்வாணம் (படுமலைக் கவ்வாணம்) 30. சாயை (அருளி) 31. மருள் 32. பழந்தக்கராகம் 33. தீபவராடி (திவ்விய வராடி) 34. முதிர்ந்த விற்தளம் 35. அநுத்திரபஞ்சமம் (அயிரப்பு) 36. தமிழக்

குச்சரி (குச்சரி) 37. மாளுவகிரி (அருட் புரி) 38. தராவணி 39. முதிர்ந்த குறிஞ்சி (குறிஞ்சி) 40. நட்டராகம் 41. வேடராமக்கிரி (இராமக்கிரி) 42. வியாழக்குறிஞ்சி 43. தக்கணாதி (வருணம்) 44. சாவக்குறிஞ்சி 45. ஆநந்தை (அரந்தை) 46. தக்கேசி 47. பையுள் காஞ்சி 48. ஆரியக் குச்சரி 49. நாகதொனி 50. வேளர் கொல்லி (தமிழ் வேளர் கொல்லி) 51. பஞ்சமம் (சுூர்த்த பஞ்சமம்) 52. பாக்கழி 53. தத்தளம் (தத்தள பஞ்சமம்) 54. பின்ன பஞ்சமம் (நாணுப் பஞ்சமம்) 55. மாதுங்க ராகம் 56. கவுசிகம்(செந்நிறம்) 57. சீகாமரம் (காமரம்) 58. சாரல் 59. சதாங்கியம் (சாங்கிமம்) 60. அரிய வேளர் கொல்லி 61. தணுக் காஞ்சி 62. முல்லை(சாதாரி) 63. வியந்தம் 64. பெயர்நிறம் ( பியந்தை) 65. நாட்டம் 66. புங்காளி(காளி) 67. கொண்டற்கிரி (கொண்டி) (குந்தளம்) 68. சீவுலி 79. யாமை 70. சாளரபாணி என்பவையாகும்.

**திறங்கள்.**

இவை ஐந்து சுரங்கள் கொண்டவையாகும் அவ்வகை பண்களாக 1. காந்தாரம் (தாரப் பண்டிறம்) 2. ஒலிப் பஞ்சமம் (செந்துருத்தி) (செந்நிறம்) 3. நளுத்தை (இந்தளம்) 4. சித்திர வேளர்கொல்லி (சாதாளி) 5. தனாசி 6. புறநீர்மை (நேர் நிறம்) 7. பாடை 8. வயிரவம் 9. நாகயாந்தி(நாகம்) 10. சூர்துங்கராகம் 11. மல்லாரி (நாட்டை) 12. படுமலை என்பவையாகும்

**திறத்திறங்கள்**

இவை நான்கு சுரங்கள் கொண்ட பண்களாகும். 1. துக்கராகம் ( வட்டி) 2. கொல்லி வராடி 3. சோமராகம் (குறுங்கவி) 4. மேராகம் என்பவையாகும்.

இவ்வாறு 103 பண்புகளையும் வகைப்படுத்திக்கூறிய முதல் இசை இலக்கண நூல் பஞ்சமரபாகும். இந்த 103 பண்களின் பெயர்கள் பஞ்ச மரபில் காணப்படுகிறது. இவை சேந்தன் திவாரம், பிங்கல நிகண்டு, சூடாமணி போன்றவற்றில் காணப்படும் பெயர்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.[8]

**பண்களுக்கு நிகரான தற்கால இராகங்கள்**

பண்டைத்தமிழ் நாட்டின் இசை முறையை அறிந்து கொள்வதற்கு தேவாரத் திருப்பதிகங்கள் அரியதொரு கருவுலகம் என்பதில் ஐயமில்லை. தேவாரத்திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 23 பண்களும் எவை, அவைகளுக்கு ஈடாகக் கருதப்படும் இக்கால இராகங்கள் எவை என்று கண்டறிவதற்குச் தமிழிசைச் சங்கம் 1949ம் ஆண்டு முதல் தொடர்ந்து பண் ஆராச்சியை நடத்தி வருகின்றது. தமிழிசைச் சங்கம் இவ்வாராய்ச்சிசி அரங்கிற்கு வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்த பல ஓதுவமூர்த்திகளை வரவழைத்து அவர்களைக் கொண்டு தேவாரப் பாடல்களை மரபுமுறை வழுவாமல் பாடச் செய்துள்ளது. இசை வல்லுனர்கள், ஆய்வாளர்கள் தமிழ்ப்புலவர்கள் ஆகியோர் ஓதுவ மூர்த்திகள் பாடிய பண்கள் பற்றி இவ்வரங்கில் விரிவான ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இசை வல்லுனர்களும், தமிழ்புலவர்களும் கண்ட முடிவுகளை தமிழிசைச்சங்கம் அவ்வப்போது வெளியிட்டு இசைத்தமிழுக்கு சிறந்த பணி புரிந்துள்ளது. பண்கள் நூற்று மூன்றாக உள்ள போதிலும் 23 பண்களும், பிற்காலத்தில் கண்டறிந்த யாழ்முரிப் பண்ணுமே வழக்கத்தில் உள்ளன. அந்த வகையில் தேவாரத்தில் காணப்படும் பண்களும் அவற்றிக்கிணையான தற்கால இராகங்களும் பின்வருமாறு,

1.இந்தளம் - மாயாமாளகௌளை. 2. சீகாமகம் - நாதநாமக்கிரிய. 3. அந்தாளிக் குறிஞ்சி - சாமா. 4. பழம்பஞ்சுரம் - சங்கராபரணம். 5. கொல்லி - நவரோசு. 6. மேகராகக்குறிஞ்சி - நீலாம்பரி. 7. புறநீர்மை - பூபாளம். 8. கௌசிகம் - பைரவி. 9. சாதாரி. - பந்துவராளி. 10. செவ்வழி - யதுகுலகாம்போதி. 11. பஞ்சமம் - ஆகிரி. 12. தக்கேசி - காம்போதி. 13. செந்துருத்தி - மத்தியமாவதி. 14. வியாழக்குறிஞ்சி - சௌராஷ்டிரம். 15 காந்தாரபஞ்சமம் - கேதாரகௌளை. 16. நட்டபாடை - நாட்டை.

17. பழந்தக்கராகம் - சுத்தசாவேரி. 18. குறிஞ்சி - அரிகாம்போதி. 19. நட்டராகம் - பந்துவராளி. 20. தக்கராகம் - காம்போதி. 21. காந்தாரம் - நவரோசு. 22. பியந்தைக்காந்தாரம் - நவரோசு. 23. கொல்லிக்கௌவாணம் - நவரோசு. 24. யாழ்முரி - அடாணா.

கி.பி 2ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புத திருவந்தாதி ஆகிய பதிகங்களை அருளினார். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் நட்டப்பாடைப் பண்ணிலும், மூத்த திருப்பதிகங்கள் இத்தளப்பண்ணிலும் இயற்றப்பட்டன. 103 பண்கள் பற்றிய குறிப்புக்கள் நூல்களில் காணப்படுகின்ற போதிலும் 7ம் 8ம் நூற்றாண்டுகளில் தேவார மூவரால் அருளப் பெற்று இன்று நமக்குக் கிடைத்துள்ள 797 பதிகங்களும் அவற்றில் அமைந்த 8272 பாடல்களும் மேற்குறிப்பிட்ட பண்களிலேயே தற்போது பாடப்பட்டு வருகின்றன. தேவார முதலிகளால் அருளப்பட்ட தேவாரங்கள் அனைத்தும் இன்று நமக்கு கிடைத்ததில்லை. இத்தேவார பதிகங்கள் 103 பண்களிலும் பாடப்பட்டிருக்கலாம்.[9] இவற்றிலிருந்து இப் பண்களை அடிப்படையாகக் கொண்டே சங்ககாலம் தொட்டு இன்றுவரை பண்ணிசை பேணப்பட்டு வருவதைக் காணலாம்.

## முடிவுரை

தொகுத்து நோக்குகின்ற போது தொன்றுதொட்டு பயன்பட்டுவந்த பண்முறையானது தற்கால வழக்கில் தேவாரங்களை ஆதாரமாகக் கொண்டே காணப்படுகின்றன. தேவாரப் பாடல்களைப் பொறுத்தே பண் அமைப்பு அமைந்துள்ளது. பரந்து பட்ட நமது சமூகத்தினரிடையே பல்வேறு இசை முறைகள் காணப்படுகின்றன. அவைக்கெல்லாம் அத்திவாரமாக இருக்கும் பண்ணிசையைப் பற்றி மக்களிற்கு பூரண அறிவின்மை ஏ்னபது மிகவும் கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. கோயில்களும், ஒரு சில கச்சேரிகளிலும் பண் முறைப்படி தேவாரபாடல்கள் பாடப்பெற்று வருகின்றன. பல்வேறுபட்ட இசைகளைப் போற்றி வளரக்கும் தமிழர்கள் தமிழனுக்கே உரித்தான இசையை வளர்க்க மறுக்கின்றான். இந்தநிலை மாற்றி தமிழிசையை அதிலும் குறிப்பாக பண்ணிசையை வளர்ப்பதில் தமிழர்களாகிய நாம் கரிசனை காட்டுவோமாக இருந்தால் தொன்றுதொட்டு வளர்ந்துவரும் பண்ணிசையானது என்றும் அழியாது பாதுகாக்கப்படும் என்பதுடன் பண்களின் தனித்துவமும் காக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புக்கள்

1. தனபாண்டியன். து. ஆ, இசைத்தமிழ் வரலாறு, பக். எண் 35.
2. இராமநாதன். எஸ் - சிலப்பதிகார இசைத்தமிழ், பக். எண் - 86 -87.
3. சுந்தரம்.வி. ப. கா, தமிழிசையியல், பக். எண் 104.
4. சிவபாலன். எஸ். கே. தமிழிசை மரபு, பக். எண் - 132.
5. அருணாசலம். மு, தமிழ் இசை இலக்கிய வரலாறு, பக். எண் -188.
6. அங்கயற்கண்ணி. இ, தமிழக இசையும் ஆய்வும், பக். எண் - 34 - 35.
7. மேலது, பக். எண் - 48.
8. மேலது, பக். எண் 70.
9. அருணாசலம். மு, தமிழ் இசை இலக்கிய வரலாறு, பக். எண் 214.

## துணைநூற்பட்டியல்.


1. அங்கயற்கண்ணி. இ - தமிழக இசையும் ஆய்வும் - கலையகம் வெளியீடு - 2002.
2. அருணாசலம். மு - தமிழ் இசை இலக்கிய வரலாறு - கடவு பதிப்பகம் - மதுரை - 2009.

3. ஆபிரகாம்பண்டிதர். மு. - கருணாமிர்த சாகரம் - வாலி அச்சகம் - தஞ்சாவூர் - 1917.

4. இராமநாதன். எஸ் - சிலப்பதிகார இசைத்தமிழ் - தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் - சென்னை - 1981.

5. சுவாமி விபுலாநந்தர் - யாழ்நூல் - கரந்தை தமிழ்ச்சங்கம் வெளியீடு - 1947.

6. சுந்தரம்.வி.ப.கா - தமிழிசையியல் - தமிழ்ப்பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் - 1994.

7. சிவபாலன்.எஸ்.கே. - தமிழிசை மரபு - இசைக்கோயில் வெளியீடு - சென்னை - 1999, 2000.

8. தண்டபாணி. ப திராவிடர் இசை - ஆபிரகாம் பண்டிதர் மன்றம் - பதிப்பு - 2 - 2001.

9. தனபாண்டியன். து.ஆ - இசைத்தமிழ் வரலாறு - வெளியீட்டு - 1994.

❑❑❑